IA.No. 01/2025 in OS. No. 130/2024
RW2- துரைராஜ், த/பெ. பூங்கோன்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். இந்த மனுவைப்பற்றியும் இந்த வழக்கைப் பற்றிய முழுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் பரப்பளவு மற்றும் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த மனு சொத்தின் அருகில் என்னுடைய சொத்து உள்ளதா என்றால் இல்லை. ரமேஷ் என்பவர் என்னுடைய நண்பர் என்றால் சரிதான். ரமேஷ் என்பவர் என்னுடைய நண்பர் என்ற அடிப்படையில் நான் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்நீதிமன்றம் இவ்வழக்கில் ஏற்கனவே எதிர்மனுதாரர்களான ரமேஷ் மற்றும் கம்சலா அத்துமீறி உள்ளே நுழையக்கூடாது என இடைக்கால தடை உத்தரவு போடப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக நான் சாட்சி சொல்வது செல்லாது என்றால் சரியல்ல. சுமார் 8 மாதங்களுக்கு முன்பு மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நிலத்தில் சண்டை நடந்தது என்றால் சரிதான். மேலும் அந்த சம்பவத்தில் ரமேஷ் மற்றும் கம்சலா ஆகியோர் சுதாகர் என்பவரை அடித்து காயப்படுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தில் ரமேஷ் மற்றும் கம்சலா தாக்கியதால் தான் மேற்படி நபர்கள் மீது குற்றவழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ரமேஷ் மற்றும் கம்சலா ஆகியோர்கள் ஆடு, மாடு கட்டுவதற்காக கொட்டகை கட்டியுள்ளது புறம்போக்கு நிலத்தில் உள்ளதா என்றால் இல்லை அது பட்டா இடமாகும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சொல்கிறேன்

என்றாலும், அது ஏரிக்கரை புறம்போக்கு நிலத்தில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. பட்டா நிலத்தில் உள்ளது என்றால் அது ரமேஷ் என்பவரின் பட்டா நிலத்தில் உள்ளதா அல்லது சுதாகர் என்பவரின் பட்டா நிலத்தில் உள்ளதா என்றால் ரமேஷ் என்பவரின் பட்டாவில் தான் உள்ளது. நான் ரமேஷ் மற்றும் கம்சலா நிலத்தில் விவசாயம் செய்வதற்கு டிராக்டர் மற்றும் கூலியாட்களை நான் தான் அழைத்துசெல்வேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஏற்கனவே பிறப்பித்த நீதிமன்ற உத்தரவை மீறி சாட்சிசொல்லமுடியாது என்றாலும், என்னுடைய சாட்சியம் செல்லாது என்றாலும் சரியல்ல. ரமேஷ் மற்றும் கம்சலா ஆகிய இருவரும் நீதிமன்ற தடைஉத்தரவை மீறியுள்ளதால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குப்படி தண்டிக்கப்படவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-.M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்